# ஒன்ராறியோவின் செயற் திட்டம்: பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி (Ontario's Action Plan: Protect ,Support ,Recover)

## முன்னணிச் சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்கும், மக்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஆதரவளிக்கவும், ஒன்ராறியோவின் மீட்சிக்கு அடித்தளத்தை அமைப்பதற்கும் தேவையான கூடுதல் ஆதார வளங்களை *2020 Budget (வரவு செலவுத் திட்டம்)* வழங்குகின்றது.

இன்று, நிதி அமைச்சர் Rod Phillips ஒன்ராறியோவின் செயற் திட்டத்தை வெளியிட்டார்: *பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி — COVID-19 இனால் ஏற்பட்டுள்ள கடுமையான உடல்நலம் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களுக்குப் பதிலளிப்பதற்கான விரிவான ஒரு செயற் திட்டத்தின் அடுத்த கட்டம்*. மக்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்குத் தேவையான மருத்துவ வசதிகளை வழங்குவதற்கும், வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வேலைகளை உருவாக்குவோர் எல்லோருக்கும் உதவுவதற்கான முக்கியமான திட்டங்கள் மற்றும் வரி நடவடிக்கைகளை வழங்குவதற்கும், மாகாணத்திற்கான நீண்ட-காலப் பொருளாதார மீட்சிக்கான வலுவானதொரு அடித்தளத்தை அமைப்பதற்கும் என மூன்று ஆண்டுகளில் மொத்தம் $45 பில்லியன் தொகை உதவியை வழங்கும் திட்டமொன்றினை *ஒன்ராறியோவின் செயற் திட்டம்* இப்போது தயாரித்துள்ளது,

## பாதுகாப்பு

ஒன்ராறியோவின் COVID-19 க்கான சுகாதார செலவீனங்கள் மொத்தமாக $15.2 பில்லியன் தொகையாக இருக்கக்கூடும் எனத் தற்போது கணிப்பிடப்பட்டுள்ளது. தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில், வளர்ந்து வரும் தேவைகளுக்கு மாகாணம் பதிலளிக்கக்கூடியதாக இருப்பதனை உறுதி செய்வதற்காக, 2021-22 இல் $4 பில்லியன் தொகையும், 2022-23 இல் மேலும் $2 பில்லியன் தொகையும் கிடைக்கக் கூடிய வண்ணம் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. COVID-19 இன் இரண்டாவது அலைக்குப் பதிலளிக்கும் நாட்டின் மிக விரிவான மற்றும் வலுவான திட்டமாகிய.— உடல்நலம், நீண்ட-காலப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான மாகாணத்தின் இலையுதிர்காலத்துக்கு ஆயத்தமாகும் திட்டத்தை ஆதரிப்பதற்கான 2020–21 வருட செலவில் $2.8 பில்லியன் தொகை உள்ளடங்குகின்றது. மருத்துவமனைப் படுக்கை வசதிகளுக்கு உதவுவதற்கும், அறுவைச்சிகிச்சைப் பின்னடைவினை நிவர்த்தி செய்வதற்கும் கூடுதலான காய்ச்சல் தடுப்பூசிகளை வாங்குவதற்கும் தேவையான மேலதிக நிதியுதவியையும் இது உள்ளடக்கும்.

அத்துடன் சோதனை, மதிப்பீட்டு மையங்கள், ஆய்வக மற்றும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் PPE உள்ளிட்ட COVID-19 இன் கூடுதல் செலவுகளுக்கு உதவுவதற்காக ஒன்ராறியோவின் மருத்துவமனைகளில் மேலதிகமாக $572 மில்லியன் தொகையையும் அரசாங்கம் முதலீடு செய்கின்றது. இது கடந்த ஆண்டு வழங்கப்பட்டதை விட $2.5 பில்லியன் தொகைக்கும் அதிகமான மொத்த நிதியுதவியை மருத்துவமனைகளுக்கு வழங்குகின்றது. புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட மருத்துவமனை உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், ஒன்ராறியோ முழுவதும் உள்ள மருத்துவமனைகளை நவீனமயமாக்க உதவும் வகையில் அவற்றைப் பழுதுபார்ப்பது மற்றும் பராமரிப்பது உள்ளிட்ட அவசியமான மேம்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், மாகாணம் 10 ஆண்டுகளில் $18 பில்லியனுக்கும் அதிகமான தொகையை மூலதன மானியங்களில் முதலீடு செய்கின்றது.

COVID-19 இன் இரண்டாவது அலைகளிலிருந்து நீண்ட-காலப் பராமரிப்பு நிலையங்களில் வாழும் அன்புக்குரியவர்களைப் பாதுகாப்பதற்கும், அந்த அமைப்பில் நீண்டகாலமாக-இருக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும், தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை மேம்படுத்தத் தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்த உதவும் வண்ணம் கூடுதலானதனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை (PPE) வாங்க அனுமதிக்கவும், வலுவான சுகாதாரப் பணியாளர் சக்தியை உருவாக்கவும் என.ஒன்ராறியோ அரை பில்லியனுக்கும் அதிகமான தொகையை வழங்குகின்றது. ஒன்ராறியோவின் நீண்ட-காலப் பராமரிப்பு COVID-19 ஆணையம் (Ontario’s Long-Term Care COVID-19 Commission) அதன் மதிப்பாய்வை நிறைவு செய்து கொண்டிருக்கையில், ஒன்ராறியோவின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டு வருகின்றது. தாதி அல்லது தனிநபர் பராமரிப்புத் தொழிலாளர் ஒருவரிடமிருந்து (PSW) நீண்ட-காலப் பராமரிப்புக் குடியிருப்பாளர்கள் சராசரியாகத் தினசரி பெற்றுக்கொள்ளும் நேரடிப் பராமரிப்பை நாளொன்றுக்கு நான்கு மணி நேரமாக அதிகரிக்க மாகாணம் திட்டமிட்டுள்ளது. மேலதிகமான இந்தப் பராமரிப்பு அடுத்த நான்கு ஆண்டுகளில் கட்டம் கட்டமாக்கப்பட்டு கனேடிய மாகாணங்களில் ஒன்ராறியோவை முன்னிலை வகிக்கச் செய்யும். நீண்ட-காலப் பராமரிப்புத் துறையில், பல்லாயிரக்கணக்கான புதிய ஊழியர்களைப் பணிக்கமர்த்தல் மற்றும் பயிற்சியளித்தல் உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இந்த லட்சியத் திட்டத்திற்குத் தேவைப்படும்.

"தொற்றுநோய்ப் பரம்பல் தொடங்கிய முதல் நாளிலிருந்து, மக்களைப் பாதுகாப்பதே எமது அரசாங்கத்தின் முன்னுரிமையாக உள்ளது" என்று அமைச்சர் Phillips கூறினார். "COVID-19 இன் உடல்நல அபாயங்கள் மிகவும் தீவிரமாக உள்ளன. இரண்டாவது அலையின் போதும் அதற்கு அப்பாலும் நீண்ட-காலப் பராமரிப்பில் உள்ள எமது அன்புக்குரியவர்கள் மற்றும் முன்னணி நிலையில் நின்று பணிபுரியும் சுகாதார ஹீரோக்கள் உட்பட சகல மக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கத் தேவையான அனைத்து வளங்களையும் நாம் கிடைக்கச் செய்கின்றோம்.”

# ஆதரவு

ஒன்ராறியோவின் செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக மக்கள் மற்றும் வேலை உருவாக்குனர்களுக்கு  மொத்தமாக $13.5 பில்லியன் தொகை உதவியை அரசாங்கம் தற்போது வழங்கி வருகின்றது. COVID-19 இன் இரண்டாவது அலையின் போதும் அதற்குப் பின்னரும் குடும்பங்கள், மூத்தவர்கள், வணிகங்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் ஆதரிக்கப்படுவதை இந்தக் கூடுதலான நிவாரணம் உறுதிப்படுத்தும்.

COVID-19 இன் சில கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய உதவுவதற்காக, 12 வயதுக்குட்பட்ட பிள்ளை ஒன்றுக்கு $200 வீதமும் சிறப்புத் தேவைகளுள்ள 21 மற்றும் அதற்குட்பட்ட வயதுடைய பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு $250 வீதமும் பெற்றோர்கள் மீண்டும் பெற்றுக் கொள்வார்கள். மூன்று இளம் குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில், அவர்களில் ஒருவருக்கு விசேட தேவைகள் இருப்பின், 2020 இல் அவர்களுக்கு $1,300 கிடைக்கும் என்பதே இதன் பொருளாகும்.

மூத்தவர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்கள் நீண்ட காலமாகத் தங்கள் வீடுகளில் தங்குவதற்கும் அரசாங்கம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 2021 வரிவிதிப்பு ஆண்டிற்கு Seniors’ Home Safety Tax Credit (மூத்தோருக்கான வீட்டுப் பாதுகாப்பு வரிக் கடன்) புதிதாக மாகாணம் முன்மொழிகின்றது, இது $10,000 வரை செய்யப்படும் தகுதிவாய்ந்த புனரமைப்பிற்கு 25 சதவீதமான கடனை வழங்கும். அவர்களின் வருமானம் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு வருமான வரி செலுத்த வேண்டுமா என்பவற்றைப் பார்க்காமல் மூத்தவர்கள் தகுதி பெறுவார்கள். மூத்தவர் ஒருவரைத் தம்முடன் கொண்ட குடும்ப உறுப்பினர்களும் இதற்குத் தகுதி பெறுவார்கள்.

முன்னெப்போதுமில்லாத இந்தக் காலகட்டத்தில் வேலை உருவாக்குபவர்களை ஆதரிப்பதில் ஒன்ராறியோ அரசாங்கம் உறுதியாக உள்ளது. பொது சுகாதாரக் கட்டுப்பாடுகள் அவசியமானவை, அல்லது முன்னோக்கிச் செல்வது என்று மாகாணம் தீர்மானிக்கும் பிராந்தியங்களில் மாற்றியமைக்கப்பட்ட 2 ஆம் நிலையைச் சேர்ந்த  கட்டுப்படுத்தப்படும் அல்லது பூட்டப்படும் என வகைப்படுத்தப்பட்ட பகுதிகளில்  உள்ள தகுதியான வணிகங்களுக்கு $300 மில்லியன் தொகை நிவாரணத்தை அரசாங்கம் வழங்குகின்றது. இது சொத்து வரி மற்றும் எரிசக்தி பில்கள் போன்ற நிலையான செலவுகளை ஈடுகட்ட உதவும். வளர்ந்து வரும் தேவைகளைச் சந்திப்பதற்காகவும், ஒன்ராறியோ மக்களுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்காகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் மேலதிகமாக $1.8 பில்லியன் தொகையை மக்கள் மற்றும் வேலைவாய்ப்பு நிதியத்துக்கு (People and Jobs Fund) வழங்குகின்றது.

"COVID-19 உலகளாவிய பொருளாதார மந்தநிலையை ஏற்படுத்தியுள்ளது, மேலும் ஒன்ராறியோ அதற்கெதிரான எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கவில்லை" என்று அமைச்சர் Phillips கூறினார். "ஒவ்வொரு எதிர்மறையான பொருளாதாரப் புள்ளிவிவரமும் வேலையை இழந்த ஒரு நபரையோ ஆர்வமுள்ள சிறு வணிக உரிமையாளர் ஒருவரையோ அல்லது தமது நாளாந்த தேவையைச் சந்திக்கப் போராடும் ஒரு குடும்பத்தையோ குறிக்கின்றது. பெற்றோர்கள், மூத்தவர்கள் மற்றும் சிறு வணிக உரிமையாளர்கள் உட்படக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நாம் இப்போது புதிய ஆதரவை வழங்கும் அதே நேரத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டவற்றைக் கட்டியெழுப்புகின்றோம்."

## மீட்சி

இனிவரும் எதிர்காலத்தில் ஒன்ராறியோவையும் முழு உலகையும் COVID-19 பாதிக்கும் அதே வேளையில், *2020 Budget* வளர்ச்சியை ஊக்குவிக்கும் உறுதியான ஒரு பொருளாதார மீட்சிக்கான அடித்தளத்தை உருவாக்கத் தொடங்குகின்றது. COVID-19 இலிருந்து உறுதியாக மீட்சியடைவதிலிருந்து ஒன்ராறியோவைத் தடுக்கும் தடைகளை அகற்றும் அதே வேளையில், வேலைகளை ஆதரிக்கும் முன்முயற்சிகளில் $4.8 பில்லியனை முதலீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட முக்கியமான ஆரம்ப முயற்சிகளில், வேலையைப்-பாதிக்கும் மின்சார விலைகளைக் குறைத்தல், வேலைகள் மீதான வரிகளைக் குறைத்தல்,  வசதிகளற்ற மற்றும் வசதிகுறைந்த சமூகங்களை இணைக்கும் பரந்துபட்ட உட்கட்டமைப்பில் வரலாற்று ரீதியான முதலீடு செய்தல் மற்றும் தொழிலாளர்களுக்குத் திறன் பயிற்சி அளித்தல்—தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழிலாளர்கள் போன்றவர்கள்—அதிக- தேவைத் திறன்களைக் கோரும் வேலைகளில் இணைய அவர்களுக்கு உதவுதல்.

வேலை உருவாக்குனர்களுக்கான வரிகளைக் குறைப்பதற்கும், 200,000 க்கும் மேற்பட்ட சொத்துக்களுக்கு — அல்லது மாகாணத்தில் உள்ள அனைத்து வணிக சொத்துக்களில் 94 சதவீதமானவற்றுக்கு உயர் மாகாண வணிக சொத்து வரி விகிதங்களை 0.88 சதவீதமாகக் குறைத்து நிலைமையைச் சமப்படுத்துவதற்கும் அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டு வருகின்றது.  2021 ஆம் ஆண்டில், இது பல முதலாளிகளுக்கு 30 சதவீத குறைவினைக் குறிக்கும் $450 மில்லியன் தொகையான வருடாந்த சேமிப்பை உருவாக்கும்.

COVID-19 ஆல் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள முதலாளிகளுக்குக் கூடுதல்லான ஆதரவை வழங்குவதில் ஒன்ராறியோ ஒருபடி மேலே செல்கின்றது. தமது சமூகத்தில் வேலை உருவாக்குபவர்களுக்கு குறிப்பிட்டதிலும் பார்க்க அதிகளவு வரி நிவாரணம் வழங்கும் கூடுதல் முறைமைகளை சில நகராட்சிகள் விரும்புகின்றன என்பதனை அரசாங்கம் கேள்விப்பட்டிருக்கின்றது. சிறு வணிகங்களுக்கான சொத்து வரியைக் குறைக்கும் திறனையும், இந்தக் குறைப்புகளுடன் பொருந்துவதைக் கருத்திற் கொள்வதற்கான மாகாண உறுதிப்பாட்டையும் நகராட்சிகளுக்கு வழங்க முன்வந்து உள்ளூர் அரசாங்கங்களின் கோரிக்கைகளுக்கு ஒன்ராறியோ பதிலளித்து வருகின்றது. நகராட்சி ஏற்றுக்கொள்வதனைப் பொறுத்து 2022–23க்குள் மொத்த நகராட்சி மற்றும் மாகாண சொத்து வரி நிவாரணத்தில் $385 மில்லியன் மட்டிலான தொகையைச் சிறு வணிகங்களுக்கு இது அளிக்கும்.

Employer Health Tax (பணியாளர் சுகாதார வரி - EHT) விலக்கினை நிரந்தரமாகவே $490,000 இலிருந்து $1மில்லியனாக்குமாறு முன்மொழிவதன் மூலம் மேலதிகமான30,000 முதலாளிகளுக்கான வேலைகள் மீதான வரியையும் இந்த மாகாணம் முடிவுக்கு கொண்டுவருகின்றது. இது 2021-22 இல் தனியார்-துறை முதலாளிகளுக்கு $360 மில்லியன் தொகையை மீதப்படுத்தும், இத்தொகை வேலைகள் மற்றும் வளர்ச்சியில் மீண்டும் முதலீடு செய்யப்படலாம். இந்த மேலதிகமான நிவாரணத்துடன் 90 சதவீத முதலாளிகள் EHT வரிப்பணத்தைச் செலுத்த மாட்டார்கள்.

தொழில் செய்வதற்கான இடமாக முதலாளிகள் ஒன்ராறியோவைப் பார்க்கும்போது, மாகாணத்தின் உயர் வணிக மற்றும் தொழிற்துறைக்கான மின்சாரக் கட்டணங்கள் முதலீட்டிற்கு ஒரு தடையாக இருப்பது தெளிவாகின்றது, இதனால் அவர்களில் சிலர் வேறு இடங்களுக்குச் செல்கின்றனர். ஒன்ராறியோவின் ஹைட்ரோ-அல்லாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுடனான அதிக விலையுள்ள ஒப்பந்தங்களில், முதலாளிகளின் சுமையைக் குறைக்கும் ஒரு திட்டத்தை *2020 Budget* கோடிட்டுக் காட்டுகின்றது, இது ஒரேயொரு தடவையில் என்றைக்குமாகக் குறைக்கப்படும். ஜனவரி 1, 2021 முதல், முன்னைய அரசாங்கத்தின் கீழ் நுழைந்த இந்த ஒப்பந்தங்களின் விலையில் ஒரு பகுதிக்கு, மாகாணத்தால் நிதியுதவி வழங்கப்படும், கட்டணம் செலுத்துபவர்களால் அல்ல. இந்த மின்சாரக் கட்டண நிவாரணம் சிறப்பாக வேலைகளை உருவாக்குவதற்குச் செலவழிக்கக்கூடிய பணத்தைப் பெற உதவும். 2021 ஆம் ஆண்டு தொடக்கம் நடுத்தர-அளவு மற்றும் பாரிய தொழிற்துறை மற்றும் வணிக முதலாளிகள் சராசரியாக முறையே 14 மற்றும் 16 சதவீதத்தை பில்களில் சேமிப்பார்கள். ஒன்ராறியோ குறைந்த பட்ச போட்டியுள்ள மின்சார விலைகளைக் கொண்டிருப்பதில் இருந்து அமெரிக்காவிலுள்ள சராசரியை விட அதிக போட்டி நிறைந்த விலைகளுக்குச் செல்லும் என்பதே இதன் பொருளாகும்.

"ஒன்ராறியோவில் உள்ள நாம் அனைவரும் COVID-19 இலிருந்து வெளிவருவதில் கவனம் செலுத்துகின்றோம்" என அமைச்சர் Phillips கூறினார். "உலகளாவிய தொற்றுநோயைக் கையாளும் போது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பது கடினமாக இருக்கலாம், ஆனால் நாம் அனைவரும் நம் பங்கைச் சரியாகச் செய்தால், COVID-19 இறுதியில் நமக்குப் பின்னால் இருக்கும். வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குத் தேவையான வளர்ச்சியைத் தடுக்கும் தடைகளை அகற்ற வேண்டிய பொறுப்பு நமது அரசுக்கு உள்ளது. உலகின் பிற பகுதிகள் மீண்டு வரும்போது, ஒன்ராறியோ பின்னடைவைச் சந்தித்தால், அதற்குக் கொடுக்கும் விலை மிக அதிகமாக இருக்கும். நாங்கள் காத்திருக்க முடியாது."

சமீபத்திய பொருளாதார திட்டங்களின் அடிப்படையில் ஒரு நெகிழ்வான நடுத்தர-கால நிதித் திட்டத்தைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம், நிச்சயமற்ற உலகிற்கு மத்தியில் வெளிப்படைத்தன்மையை *2020 Budget* வழங்குகின்றது. பொருளாதார மீட்சியின் வேகத்தைப் பொறுத்து மாகாணத்தின் நிதி நிலைமை எவ்வாறு மாறக்கூடும் என்பதை விளக்கும் மாற்றுக் காட்சிகளையும் இது முன்வைக்கின்றது. *2020–21* ஆம் ஆண்டிற்கான $38.5 பில்லியன் தொகைப் பற்றாக்குறையை அரசாங்கம் முன்வைக்கின்றது, இது 2020–21இன் *முதலாம் நிதிக்காலாண்டின்* போது கூறப்பட்ட பற்றாக்குறை முன்னறிவிப்பிலிருந்து மாறாது, COVID-19 க்கு எதிரான போராட்டத்திற்கு அவசரமாகத் தேவைப்படும் செலவீனங்களையும் பிரதிபலிக்கின்றது. நடுத்தர காலப்பகுதியில், பற்றாக்குறைகள் 2021-22 இல் $33.1 பில்லியன் தொகையாகவும் 2022-23 இல் $28.2 பில்லியன் தொகையாகவும் குறைந்து வருவதாக அரசாங்கம் கணிப்பிட்டுள்ளது. உலகளாவிய தொற்றுநோயின் தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மையை ஒப்புக் கொண்ட அரசாங்கம், மார்ச் 31, 2021 க்குள் *2021 Budget* இல் சமநிலையை அடைவதற்கான வழிகளடங்கிய பல-ஆண்டுத் திட்டம் ஒன்றினையும் அட்டவணைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.s

## *ஒன்ராறியோவின் செயற் திட்டத்தின் சிறப்பம்சங்கள்: பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி:*

**பாதுகாப்பு** - COVID-19 க்கு அரசாங்கத்தின் அவசர பங்களிப்பாகப் புதிய நிதியுதவியாகிய $7.5 பில்லியன் தொகையை உள்ளடக்கும் $15.2 பில்லியன் தொகை. இப்புதிய நிதியத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- ஒரு நீண்ட காலப் பராமரிப்பு குடியிருப்பாளருக்கு தாதியர் ஒருவர் அல்லது தனிநபர் பராமரிப்புத் தொழிலாளியிடமிருந்து (PSW) சராசரியாகத் தினசரி நேரடிப் பராமரிப்பை நான்கு- ஆண்டு காலப்பகுதியில் நாளொன்றுக்கு நான்கு மணிநேரமாக உயர்த்துதல், எமது மூத்தவர்களைப் பாதுகாப்பதில் கனேடிய மாகாணங்களில் ஒன்ராறியோவை முன்னிலை வகிக்கச் செய்கின்றது.
- 2021-22 இல் $4 பில்லியன் தொகையையும், 2022-23 இல் மேலும் $2 பில்லியன் தொகையையும் மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும், COVID-19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பதற்கும் என அர்ப்பணிப்புடன் உதவுதல்.

- புதிய அவசர சிகிச்சை அறை, அதி-நவீன-நோயறிதல் இமேஜிங் மற்றும் சத்திர சிகிச்சை அறைகளுடன் புதிய Cortellucci Vaughan Hospital தளத்தைத் திறத்தல். 30 ஆண்டுகளில், இணையத் திறனைப் புதிதாகச் சேர்த்து ஒன்ராறியோவில் புதிதாகக் கட்டப்பட்ட முதல் மருத்துவமனை இதுவாகும்.

**ஆதரவு** – மக்கள் மற்றும் வேலைகளுக்கான கூடுதல் ஆதரவுக்கு $2.4 பில்லியன் தொகையை அடக்கிய $13.5 பில்லியன் தொகை. இப்புதிய நிதியத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- 12 வயது வரையுள்ள ஒரு பிள்ளைக்கு $200 மற்றும் 21 வயது வரை சிறப்புத் தேவைகளைக் கொண்ட பிள்ளை மற்றும் இளைஞர் ஒருவருக்கு $250 வீதம் என மார்ச் மாதத்தில் வழங்கப்பட்ட $378 மில்லியன் நிதியுதவியைத் தொடர்ந்து, மற்றொரு சுற்றுக் கொடுப்பனவுகளின் மூலம் $380 மில்லியன் நிதியுதவியைப் பெற்றோருக்கு வழங்குதல். இணையத்தளக் கற்றலுக்கான தொழில்நுட்பம் போன்ற COVID-19 இனால் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவுகளுக்கு இது உதவும். இதன் பொருள் என்னவெனில்,மூன்று இளம் குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பம், அவர்களில் ஒருவர் சிறப்புத் தேவைகளைக் கொண்டவர், கல்விப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகளுக்கென இக் குடும்பம்2020 ஆம் ஆண்டில் $1,300 நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளும்.
- 2021 வரிவிதிப்பு ஆண்டிற்கான Seniors' Home Safety Tax Credit ஐ முன்மொழிதல்– $10,000 வரையுள்ள தொகைக்குத் தகுதியான புனரமைப்பிற்கென 25 சதவீதம் வரைக் கடன் கொடுத்தல் – இது முதியவர்கள் தங்கள் வீடுகளைப் பாதுகாப்பானதாகவும், மேலும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதன் மூலம் தமது வீடுகளில் நீண்ட காலம் தங்க உதவும். அவர்களின் வருமானம் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு வருமான வரி செலுத்த வேண்டுமா என்பவற்றைப் பொருட்படுத்தாமல் மூத்தவர்கள் அதற்குத் தகுதி பெறுவார்கள். அவர்களுடன் வசிக்கும் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் குடும்ப உறுப்பினர்களும் தகுதி பெறுவார்கள்.
- தற்போதைய திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும், கறுப்பின இளைஞர்கள், சமூக மற்றும் பொருளாதார வெற்றியை அடைவதனை ஆதரிக்கும் புதிய பொருளாதார வலுவூட்டல் நீரோட்டத்தை உருவாக்குவதற்குரிய புதிய நிதியை மேம்படுத்துவதற்கும், அதன் அடிப்படை நிதியுதவியை இரட்டிப்பாக்கிக்,.கறுப்பின இளைஞருக்கான செயற் திட்டத்தில் (Black Youth Action Plan) 2020–21 தொடங்கி மூன்று ஆண்டுகளில் மேலதிகமாக $60 மில்லியனை முதலீடு செய்தல்.
- தொற்றுநோய் காரணமாகக் குறிப்பிடத்தக்க நிதி அழுத்தங்களைச் சந்திக்கும் சமூக சுற்றுலா, கலாச்சார மற்றும் விளையாட்டு அமைப்புகளை ஆதரிப்பதற்காக சமூகக் கட்டிட நிதிக்கு (Community Building Fund) இரண்டு ஆண்டுகளில் $100மில்லியனை முதலீடு செய்தல்.
- COVID-19 இன் விளைவாக ஒன்ராறியோவின் கலை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் செயற்பாட்டில் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட, அவற்றுக்கு $25 மில்லியன் தொகையை அவசர நிதியுதவியாக ஒரே-தடவையில் வழங்குதல்.

- 2021-22 மற்றும் 2022-23 இல் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஈடு கொடுப்பதற்கும், ஒன்ராறியோ மக்களுக்குத் தொடர்ந்து உதவி வழங்குவதற்கும்,.அடுத்த இரண்டு ஆண்டுகளில் மக்கள் மற்றும் வேலைகளை ஆதரிக்கும் அமைப்புக்கு (Support for People and Jobs Fund) மேலதிகமாக $1.8 பில்லியனை வழங்குதல்.

**மீட்டெடுத்தல்** – பொருளாதார வளர்ச்சியினால் தூண்டப்பட்டு ஏற்படும் உறுதியான மீட்சிக்கான அடித்தளத்தை உருவாக்கப் புதிய உதவிகளில் $4.8 பில்லியனை முதலிடல். இதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- மாகாணத்தில் உள்ள சமூகங்கள் இணைக்கப்படுவதனை உறுதிப்படுத்த, ஏற்கனவேயுள்ள அதன் பொறுப்புகளுடன் இணைத்து அடுத்த நான்கு ஆண்டுகளில் பரந்தளவிலான உட்கட்டமைப்பில், $680 மில்லியனுக்கும் அதிகமான மேலதிக முதலீடுகளை மேற்கொள்வது, ஒன்ராறியோவின் முதலீட்டை வரலாற்று ரீதியாகக் கிட்டத்தட்ட $1 பில்லியன் தொகைக்கு உயர்த்துகின்றது.
- வேலையைப்-பாதிக்கும் அதிக மின்சாரச் செலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு விரிவான திட்டத்துடன், ஒன்ராறியோவிற்கு அதிக வேலைகளைக் கொண்டு வருவது, நடுத்தர-அளவிலான மற்றும் பாரிய தொழிற்துறை மற்றும் வணிக முதலாளிகளுக்கு, அவர்களின் மின்சாரக் கட்டணங்களில் சராசரியாக (கூடுதல் செலவில் மூன்று ஆண்டுகளில் $1.3 பில்லியன்) முறையே 14 மற்றும் 16 சதவீதத்தை மீதப்படுத்துகின்றது,
- 200,000 க்கும் மேற்பட்ட முதலாளிகளுக்கான உயர் வணிகக் கல்வி வரி (Business Education Tax-BET) விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் அல்லது வேலை உருவாக்குனர்களின் ஒன்ராறியோவில் உள்ள அனைத்து வணிகச் சொத்துக்களில் 94 சதவீதத்தின் மீதான சொத்து வரிகளை 0.88 சத வீதத்திற்குக் குறைப்பதன் மூலமும் அவற்றைச் சமப்படுத்தல். இது உடனடியான வருடாந்த சேமிப்பில் $450 மில்லியன் தொகையை உருவாக்குகின்றது மற்றும் தற்போது மாகாணத்தில் மிக உயர்ந்த BET விகிதத்திற்கு உட்பட்ட பல வணிகங்களுக்கான 30 சதவீதக் கழிவினை இது குறிக்கின்றது.
- சிறு வணிகங்களுக்கான சொத்து வரியைக் குறைக்கும் திறனையும், இந்தக் குறைப்புகளுடன் பொருந்துவதைக் கருத்திற் கொள்வதற்கான ஒரு மாகாண உறுதிப்பாட்டையும் நகராட்சிகளுக்கு வழங்க முன்மொழிவதன் மூலம் உள்ளூர் அரசாங்கங்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல். நகராட்சி ஏற்றுக்கொள்வதனைப் பொறுத்து 2022–23 க்குள் மொத்த நகராட்சி மற்றும் மாகாண சொத்து வரி நிவாரணத்தில் சிறு வணிகங்களுக்கு $385 மில்லியனை இது வழங்கும்.
- Employer Health Tax (EHT) விலக்கினை நிரந்தரமாக்குவதற்கு முன்மொழிவதன் மூலம், மேலதிகமாக 30,000 முதலாளிகளுக்கு வேலைகள் மீதான வரி விலக்கு $490,000 இலிருந்து $1 மில்லியனாக உயர்வடைகின்றது. இந்த மேலதிக நிவாரணத்துடன் 90 சதவீத முதலாளிகள் EHT செலுத்த மாட்டார்கள், இது 2021-22 இல் $360 மில்லியன் தொகையை மீதப்படுத்தி, வேலைகள் மற்றும் வளர்ச்சியில் மறு முதலீடு செய்வதற்கு வழி வகுக்கும்.

- ஒன்ராறியோவில் விடுமுறையை வீட்டில் வசிக்கும் ஆண்டான 2021 இல் ஒன்ராறியோவைப் பற்றிப் பாதுகாப்பாக அறிந்துகொள்வதனை ஊக்குவிப்பதற்காக, ஒன்ராறியோவில் வசிப்பவர்களுக்குத், தகுதியான ஒன்ராறியோ சுற்றுலாச் செலவீனங்களுக்காக 20 சதவிகிதம் வரை வழங்க உறுதியளிக்கின்றது.
- 3 ஆண்டுகளில் $180.5 மில்லியன் தொகை முதலீட்டில், தொற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் உள்ள தொழிலாளர்களைப், பயிற்சி மற்றும் வேலைகளில் இணைத்தல். திறன் பயிற்சிக்காக Employment Ontario மூலம் மேலதிகமான $100 மில்லியன் தொகை அர்ப்பணிப்பு முதலீடுகள், மறுவடிவமைப்பு செய்யப்பட்ட இரண்டாவது தொழிற் திட்டம் (Second Career program) அத்துடன் அதிகமாகக்-கோரப்படும் திறன்களைப் பெறுவதற்கு.$59.5 மில்லியன் தொகை ஆகியவற்றை உள்ளடக்கிய இது ஒரு திறமையான வர்த்தக மூலோபாயமாகும்.
- Ontario Onwards Acceleration Fund (தொடர்ந்து ஊக்குவிக்கும் ஒன்ராறியோவின் நிதி) மூலம் அரசாங்க சேவைகளை மிகவும் நம்பகமானதாகவும், வசதியானதாகவும், அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்கு நான்கு ஆண்டுகளில் $500 மில்லியன் தொகையை வழங்குதல்.

## விரைவுச் செய்திகள்

- ஜூன் மாதத்திலிருந்து, ஒன்ராறியோவின் வேலைவாய்ப்பு 838,000 நிகர வேலைகளால் அதிகரித்துள்ளது, செப்டம்பர் மாத நிலைமைப்படி, வேலைவாய்ப்பு பெப்ரவரி 2020 இலிருந்த அளவின் 95.8 சதவீதத்தை எட்டியுள்ளது.
- ஒன்ராறியோவின் உண்மையான GDP (மொத்த உள்நாட்டு உற்பத்தி) 2020 இல் 6.5 சதவிகிதம் குறைந்து 2021 இல் 4.9 சதவிகிதம் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோவின் பொருளாதார வளர்ச்சி 2021 க்குப் பின்னர் தொடர்ச்சியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது, 2023 இல் 2.0 சதவீத மிதமான வளர்ச்சியை அடைவதற்கு முன்னர் உண்மையான GDP, 2022 இல், 3.5 சதவீதமாக உயரும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.
- *Fiscal Sustainability, Transparency and Accountability Act*, *2019*(FSTAA) பல-ஆண்டு நிதித் திட்டத்தின் இறுதி ஆண்டில் ஒரு சீரான பட்ஜெட் திட்டமிடப்படாவிட்டால் மீட்புத் திட்டத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும் எனக் கோருகின்றது. இந்தச் சட்டம் நெகிழ்வுத்தன்மையின் தேவையை அங்கீகரிக்கின்றது மற்றும் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பதிலளிக்கும் திறனையும் வழங்குகின்றது. COVID-19 தொற்றுநோய் காரணமாகத் தொடரும், முன் எப்போதும் இல்லாத நிச்சயமற்ற தன்மையையும் மற்றும் அதனுடன் கூடிய அபாயங்களையும் கருத்திற்கொண்டு,

  *2020 Budget* இல் மீட்சித்திட்டத்தைச் சேர்க்க வேண்டிய தேவையை இடைநிறுத்த FSTAA க்குத் திருத்தங்களை அரசாங்கம் முன்மொழிகின்றது.
- COVID-19 நெருக்கடியின் தாக்கங்களைப் பிரதிபலிக்கும் நிதிக் கண்ணோட்டத்தை *ஒன்ராறியோவின் செயற் திட்டத்தில்,* மார்ச் 25, 2020 அன்று வெளியிட்ட கனடாவின் முதல் சட்டஆட்சிப் பிராந்தியம் ஒன்ராறியோவாகும். *COVID-19 க்கு முகம் கொடுத்தல்.*

## மேலதிக ஆதாரவளங்கள்

*ஒன்ராறியோவின் செயற் திட்டம்: பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி*

அடிப்படை தகவல்: பாதுகாத்தல்— COVID-19 க்கு எதிரான உடனடி நடவடிக்கை

அடிப்படை தகவல்: ஆதரித்தல்– மக்களுக்கும் தொழில்களுக்கும் உதவுதல்

அடிப்படை தகவல்:மீட்டெடுத்தல் – வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குதல்

அடிப்படை தகவல்: ஒன்ராறியோவின் நிதியங்களைப் பொறுப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் நிர்வகித்தல்

அடிப்படை தகவல்: *ஒன்ராறியோ செயற் திட்டத்தின்* சிறப்பம்சங்கள் *பாதுகாப்பு, ஆதரவு, மீட்சி*

ஒன்ராறியோவின் பொருளாதாரக் கணக்குகள் - 2020 இன் இரண்டாவது காலாண்டு

*ஒன்ராறியோவின் செயற் திட்டம்: COVID-19 க்கு முகம் கொடுத்தல்*